சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், சைதாப்பேட்டை வெங்கடாபுரம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநகராட்சி சார்பில், நேற்று (28.06.2026) நடைபெற்ற தேசிய போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமினை பார்வையிட்டு குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார்.

பம்மல் தெற்கு பகுதி, 6வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் வட்ட அவைத் தலைவர் க.சம்பத் தலைமையில் கல்யாண் டில்லி எம்.சி,வட்டக் கழக செயலாளர் வி. எஸ். ஜெகநாதன் வரவேற்புரையில் வட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், மண்டல குழு தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் ப. காளேஸ்வரன்,ஆர்உமாசங்கர், என். பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பா.கவிதா,பா.டில்லி, பி.ஜே.வேந்தன்,இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு. மனோகரன்,ஆர்.கோகுல், பேராசிரியர் எல்.பிரபு,வி. ரவிச்சந்திரன், பி.கே.ஏ. சத்திய பிரபு உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தென்காசி ஆட்சியர் அலுவலகத்தில்

மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

எம்,எல்,ஏக்கள் மரு.கலை கதிரவன்– ஈ.ராஜா–திலீபன் – ஜெயக்குமார் - ஆட்சியர் ரஞ்சித் சிங் பங்கேற்பு!

தென்காசி.ஜூன் 29-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் (27.06.2026) அன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கி ணைப்பு கண்காணிப்பு குழு கூட்டம் தென்காசி நாடா ளுமன்ற உறுப்பினரும் கண் காணிப்பு குழு தலைவரு மான மரு.ராணி ஸ்ரீகுமார் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி) ஈ.ராஜா (வாசுதேவநல்லூர்) மரு.திலீபன் ஜெயசங்கர் (சங்கரன்கோவில்) ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ் வில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் பங்கேற்றார்.

பின்னர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தெரி வித்ததாவது.

வருவாய் மற்றும் பேரி டர் மேலாண்மைத்துறை யின் கீழ் சமூக பாதுகாப்புத் திட்டத்தில் வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை குறித்தும், மாவட்ட வழங் கல் மற்றும் நுகர்வோர் பாது காப்புத்துறையின் கீழ் அந்தி யோதனா, அந்நயோஜனா திட்ட அட்டைகள் குறித் தும்,குடும்ப அட்டைகளின் பயனாளிகள் குறித்தும், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான் மையினர் நலத்துறை சார் பில் பிரதம மந்திரி ஜன் விகாஷ் திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகள் குறித் தும், புவியியல் மற்றும் சுரங் கத்துறையில் மேற் கொள்ளப்படும் திட்டப் பணிகள் குறித்தும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை சார் பில் தேசிய நகர்ப்புற சுகா தார குழுமத்தில் 15 வது நிதிக்குழு திட்டம்,சிறப்பு பகுதி மேம்பாட்டு திட் டம்,கவனம் சார்ந்த வட் டார வளர்ச்சித்திட்டம், ஜனதி சுரக்ஷா திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் குறித்தும்,JSSK திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் குறித்தும், டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி திட்டத் தில் பயன்பெற்ற பயனாளி கள் குறித்தும், RBSK பிறவிக் குறை பாடுடன் பிறந்த குழந்தைகளைக் கண்ட றிந்து அவர்களுக்கு இலவச மாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திட்டத் தில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்தும், கண்ணொளி காப்போம் திட்டம் குறித்தும், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரி யத்தின் சார்பில் மேற் கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்தும், நீர்வளத்துறை (சிற் றாறு,மேல்வைப்பாறு வடி நிலக்கோட்டம்) திட்டப்ப ணிகள் குறித்தும்,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட் சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட் டம், தூய்மை பாரத இயக் கம்II. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்,பிரதம மந் திரி கிராம சாலைகள் மேம் பாட்டுத்திட்டம்,ஜல் ஜீவன் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச் சித்திட்டத்தில் மேற்கொள் ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்தும்,

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வா தார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், சுய உதவிக்கு முக்களுக்கு ஆதார நிதி விடு வித்தல், வங்கிக்கடன் இணைப்பு, சமுதாய முத லீட்டு நிதி போன்ற திட்டப் பணிகள் குறித்தும், வனத் துறை சார்பில் பசுமைத் தமிழக இயக்கம், நெல்லை வன உயிரின சரணாலய பணிகள், ஒன்றிய, மாநில பங்களிப்பு யானைகள்,புலி கள் திட்டப்பணிகள், தீ தடுப்பு வேளாண்மைத்திட் டம், அகஸ்தியர் மலை, உயிர்க்கோள காப்பக திட் டம், தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு பசுமை யாக்குதல் திட்டம், தமிழ்நாடு ஈடு செய்யும் காடு வளர்ப்பு திட்டம், சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம், தலையணையில் சூழல் சுற்றுலா ஏற்படுத்து தல்,மரகத பூஞ்சோலை திட் டம்,யானை புகா அகழி மற் றும் சோலார் மின்வேலி அமைக்கும் திட்டம், வனக்கோட்டத்தில் மனித வன உயிரின மோதல் தடுப்பு பணிகள் திட்ட போன்ற திட்டப்பணிகள் குறித்தும்,

பொதுப்பணித்துறை கட் டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் நிலு வையில் உள்ள பணிகள் குறித்தும், ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்ப டுத் தப்பட்டு வரும் பணி கள் குறித்தும்,பட்டு வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், தோட் டக்கலைத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் பணிகள் குறித்தும், கால் நடை பராமரிப்புத் துறை யின் கீழ் செயல்படுத்தப் பட்டுவரும் பணிகள் குறித்தும்,ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட் டத்தின் பணிகள் குறித் தும்,எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப்பணிகள் குறித்தும்,

சமூகநலன் மற்றும் மக ளிர் உரிமைத்துறையின் கீழ் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாது காப்புத்திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகள் குறித் தும்,திருமண நிதியுதவித் திட்டங்கள்,பெண்குழந்தை களை காப்போம்,பெண் குழந்தைகளுக்கு கற்பிப் போம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டப் பணிகள் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்,மிஷன் சக்தி சங்கல்ப் திட்டம், மாவட்ட மகளிர் அதிகார மையங்கள்,சகி ஒருங்கி ணைந்த சேவை மையம் போன்ற திட்டப்பணிகள் குறித்தும்,மாற்றுத் திறனா ளிகள் நலத்துறையின் சார் பில் திட்ட முன்னேற்ற அறிக்கை,செயல் படுத்தப்ப டும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள் குறித்தும், பள் ளிக் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் தீன்தயாள் உபாத்யா கிராம் ஜோதி யோஜனா திட்டப் பணிகள்,ஒருங்கிணைக்கப் பட்ட மின் மேம்பாட்டு திட்டம்,திருநெல்வேலி தென்காசி தேசிய நெடுஞ் சாலை கோட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள்குறித்தும், நெடுஞ்சாலைத்துறை கட்டு மானம் மற்றும் பராமரிப்பு ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டப்பணி கள் குறித்தும், தமிழ்நாடு சாலை மேம்பாடு II திட்டப் பணிகள் குறித்தும், திரு நெல்வேலிசெங்கோட்டை கொல்லம் சாலை திட்டப் பணிகள் குறித்தும், நக ராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அனைத்து நக ராட்சி மற்றும் பேரூராட்சி களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் கு றித்தும், மாவட்ட தொழில் மையம் சார்பில் பிரதம மந்திரியின் வேலை உருவாக்கும் திட்டம், பிர தம மந்திரியின் உணவு பதப் படுத்தும் குறு நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டப்ப ணிகள் குறித்தும்,மாவட்ட வேலைவாய்ப்புத் துறை யின் சார்பில் வேலைவாய்ப் பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டப் பணிகள் குறித்தும் ,தமிழ் நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பயனாளிகள் தாமா கவே வீடுகட்டும் திட்டப்ப ணிகள் குறித்தும், மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் வேளாண் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங் கள், கல்வி,வீடு ஆகியவற் றுக்கு வழங்கப்பட்ட கட னுதவி திட்டம் குறித்தும், மாவட்ட திறன் பயிற்சி மையம் சார்பில் வேலை வாய்ப்பு, திறன் பயிற்சி திட் டப்பணிகள் குறித்தும், ஆதி திராவிடர் மற்றும் பழங்கு டியினர் நலத்துறையின் திட் டப்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, தொடர்ந்து, அனைத்து துறை அலுவலர்களும் மாவட்டத்தில் செயல்ப டுத்தி வரும் திட்டங்கள் அனைத்தையும் மக்கள் நலன் கருதி விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். நடைபெற்று வரும் வளர்ச் சிப்பணிகளின் அறிக்கை யினை மாதந்தோறும் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி,மின்சார வசதி,சாலை வசதி ஆகியவற்றை டிசம்பர் இறுதிக்குள் சரி செய்து பொது மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டு வருவ தற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதே போல் சேதமடைந்த கழிவு நீர் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். ஆங் காங்கே தேங்கியுள்ள குப் பைகளை அகற்று வதை யும்,மக்கும் குப்பை,மக்கா குப்பை என பிரித்து எடுப்ப தையும் அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தென்காசி நாடா ளுமன்ற உறுப்பினர் மற்றும் DISHA குழு தலைவருமான மரு.ராணிஸ்ரீகுமார் அலுவ லர்களுக்கு அறிவுறுத் தினார்.

நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.அசோக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்ட பாணி, நகர்மன்ற தலைவர் கள் சாதிர் (தென்காசி) மூப் பன் ஹபீபூர் ரகுமான் (கடையநல்லூர்) பேரூ ராட்சி தலைவர்கள் சின் னத்தாய் சண்முகநாதன், வேணி வீரபாண்டியன், உள்பட அனைத்து துறை அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

சென்னை மாநகராட்சி,151வது வார்டு,அரசு நகர்புற மருத்துவமனை, லட்சுமி நகர் நலச்சங்க கட்டிடம் மற்றும் சின்னப்போரூர் பால்வாடி ஆகிய இடங்களில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து வழங்குகின்ற முகாமினை சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ச.சங்கர் கணேஸ் துவக்கி வைத்தார். நிகழ்வில் துணை ஆணையர், அலுவலர்,சுகாதார அலுவலர்,மருத்துவ அலுவலர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள்,பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அறிவிப்பு மட்டும் போதுமா?

விழிப்புணர்வு இல்லாமல் வெறிச்சோடிய போலியோ முகாம்கள்!

குழந்தைகள் நலத் திட்டங்களிலும் த.வெ.க. அரசு மெத்தனமா?”

திருவள்ளூர், ஜூன் 29

இளம்பிள்ளை வாதம் (போலியோ) என்ற கொடிய நோயை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் நடத்தப்படும் போலியோ சொட்டு மருந்து முகாம், குழந்தைகளின் எதிர்கால ஆரோக்கியத்தை உறுதிப்ப டுத்தும் மிக முக்கியமான மக்கள் நலத் திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்தின் வெற்றி, மருத்துவப் பணியாளர்க ளின் உழைப்பை மட்டுமல் லாமல், அரசு மேற்கொள் ளும் விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் சார்ந்துள் ளது.

இந்த நிலையில், திருவள் ளூர் மாவட்டத்தில் 1,493 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்ப டும் என்றும், 6,127 பணியா ளர்கள் பணியில் ஈடுபடு வார்கள் என்றும் அரசு அறிவித்திருந்தது. ஆனால், மாவட்டத் தலைநகரி லேயே பல மையங்கள் பொதுமக்கள் வருகை யின்றி வெறிச்சோடியிருந்த காட்சிகள், அறிவிப்புக்கும் செயல்பாட்டிற்கும் இடை யிலான பெரிய இடைவெ ளியை வெளிப்படுத்தியதா கக் கூறப்படுகிறது.

பல இடங்களில் பெற் றோர்களுக்கு முகாம் நடை பெறுவது பற்றிய தகவலே சென்றடையவில்லை என் றும், சில மையங்களில் செவிலியர்கள் இல்லாமல் பேனர்கள் மற்றும் மேசை கள் மட்டுமே இருந்ததாக வும் கூறப்படுகிறது. மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் குழந்தைகளுடன் சென்ற பெற்றோர்களை சாலையி லேயே அழைத்து வந்து சொட்டு மருந்து வழங்கிய சம்பவங்களும் காணப்பட் டதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

முன்னாள் திமுக ஆட்சி காலத்தில், போலியோ முகாம் நாட்களில் தெருமு னைப் பிரச்சாரம், ஒலிபெ ருக்கி அறிவிப்புகள், அங் கன்வாடி பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியா ளர்களின் வீடு தோறும் விழிப்புணர்வு, உள்ளாட்சி அமைப்புகளின் ஒருங்கி ணைந்த செயல்பாடு ஆகிய வற்றின் மூலம் பெற்றோர் கள் தாமாகவே கு ழ ந் தை க ளை முகாம்களுக்கு அழைத்து வந்ததாக பலரும் நினைவு கூருகின்றனர். அதற்கு மாறாக, இந்த முறை பல இடங்களில் முகாம் நடை பெறுவதே மக்களுக்கு தெரி யாத நிலை ஏற்பட்டதாக சமூக வலைதளங்களிலும் பொதுமக்களிடையிலும் விமர்சனங்கள் எழுந் துள்ளன.

குழந்தைகளின் உயிர் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களில் கூட போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டி ருந்தால், மக்கள் நலத் திட் டங்களை அரசு எவ்வளவு முக்கியத்துவத்துடன் அணு குகிறது என்ற கேள்வி எழு வது இயல்பானதே என அர சியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

விளம்பர அறிவிப்புகள் வெளியிடுவது மட்டுமே போதாது; அவை ஒவ் வொரு பெற்றோரையும் சென்றடையும் வகையில் களப்பணிகள் மேற்கொள் ளப்பட வேண்டும். இல்லை யெனில், மக்கள் நலத் திட் டங்கள் வெறும் ஆவணங்களிலும் செய்திக் குறிப்புகளிலும் மட்டுமே நிறைவடையும் அபாயம் இருப்பதாக சமூக ஆர்வலர் கள் எச்சரிக்கின்றனர்.

குழந்தைகளின் ஆரோக் கியம் அரசியல் எல்லைக ளைக் கடந்த ஒன்று. எனவே, போலியோ போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் எந்தவித அலட்சியத்திற்கும் இட மின்றி, முழுமையான விழிப்புணர்வு, நேரடி கண் காணிப்பு மற்றும் பொறுப் புணர்வுடன் செயல்பட வேண்டியது அரசின் கடமை என்று பொதுமக் கள் வலியுறுத்துகின்றனர்.

மாவட்டச் செயலாளர் த.வேலு தலைமையில் மாணவரணி சார்பில்

போதைப் பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை,ஜூன்.29-

கழக மாணவரணி சார் பில் பொதுவெளியில் போதைப்பொருள் உப யோகப்படுத்தியது கண் டித்து த.வெ.க . அமைச் சரை கண்டித்து இன்று 29.06.2026 (திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில். சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை.த.வேலு அவர்க ளின் தலைமையில் எழும் பூர் ராஜரத்தினம் ஸ்டேடி யம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறு கிறது .

ஆகவே மயிலை கிழக்கு பகுதியைச் சார்ந்த சார்ந்த மாநில,மாவட்ட,பகுதி நிர் வாகிகள், வட்ட ★கழக செயலாளரகள் , மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற் றும் துணை அமைப்பாளர் கள், BLA2,BDO,BLC நிர்வாகி கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலா ளர் எஸ். முரளி அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்ட தி.மு.க.

மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தியாகராயர் நகர் தொகுதி பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை - கோ.சு.மணி அறிக்கை!

சென்னை, ஜூன்.29-

தியாகராயநகர் தொகுதி பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை கோ.சு.மணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் பொது இடத்தில் போதைப்பொருள் பயன்ப டுத்தியது போல் வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியு றுத்தியும் தவறான செய லை செய்ய இளைஞர் களை ஊக்குவிக்கும் அமைச்சர் சரத்குமாரின் செயலை கடுமையாக கண் டித்து இன்று 29.06.2026 திங்கட்கிழமை காலை 9.00 மணி அளவில் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு தலைமை யில் தியாகராய நகர் தொகுதி மேற்கு கிழக்குப் பகுதி செயலாளர்கள் கே. ஏழுமலை எம்.சி., கோ. சு.மணி மயிலை தொகுதி மேற்கு கிழக்கு பகுதி செய லாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை எஸ்.முரளி முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

எனவே இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத் திற்கு மாநில மாவட்ட நிர் வாகிகள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர் கள் வட்டகழக செயலாளர் கள் பகுதி கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் ஆற் றல்மிக்க செயல்வீரர்கள் வீராங்கனைகள் அனைவ ரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகி றது.

இவ்வாறு கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை சார்பில் பத்தாவது மண்டலத்திற்கு உட்பட்ட 142வது வார்டில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம், 28.06.2026 ஞாயிற்றுகிழமை காலை 7 மணியளவில் சைதாப்பேட்டை வி.எஸ். முதலித் தெருவில் உள்ள கணபதி தேசிய நடுநிலைப்பள்ளியில் குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து செலுத்தி முகாமை சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழுத் தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி தொடக்கி வைத்தார். உடன் வட்ட கழக செயலாளர்கள் எஸ். பி.கோதண்டம், எம்.நாகா, மண்டல சுகாதார நல அலுவலர், மண்டல மகப்பேறு நல மருத்துவ அலுவலர், உள்ளிட்ட சுகாதார அலுவலர்கள் மற்றும் கழக தோழர்கள், பெருதிரளராக பங்கேற்றனர்.